# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

**SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,**

SEPTEMBER 25, 1923.

ந. 17 (4).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம்௵ ஸெப்டெம்பர்௴ 25௳. [விலை, 6 பை.


# இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

# BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிருபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிருபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

---

இந்தியா கவர்ன்மென்ட்.

சட்டநிருபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1923-ம்௵ ஜூலை௴ 19௳ இந்திய சட்ட நிருபண சபையில் கொண்டுவரப்பட்டது :—

No. 32 OF 1923.

1923-ம்௵த்து 32-வது நெ.

A BILL TO CONSOLIDATE AND AMEND THE LAW RELATING TO LEGAL PRACTITIONERS IN INDIA.

இந்தியாவில் நியாயவாதிகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான மசோதா ஆக்ட்.

இந்தியாவில் நியாயவாதிகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றாய்ச் சேர்ப்பதும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஜெனரல் பார் கௌன்ஸில் என்னும் நியாயவாதிகளின் பொதுச் சபைகளை ஸ்தாபிக்க இந்தியா கவர்ன்மென்டுக்கும் பிரதேச கவர்ன்மென்டுகளுக்கும் அதிகாரம் கொடுப்பதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

## 1-ம் அத்தியாயம்.

### பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வியாபகமும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, 192 -ம்௵த்து நியாயவாதிகளாக்டென்று சொல்லலாம்.

(3) இது 1924-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி யன்றைக்குச் செலாவணியாகத் தொடங்கும்.

(3) இது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விளம்பர மூலமாய் இந்த ஆக்ட் பிரயோகப்படுவதனின்றும் நிவாரணை செய்யக்கூடிய அளவுக்கன்றி மற்றப்படி, ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கும்.

சட்டங்கள் ரத்தாவதும் விதிகள் முதலியவற்றிற்கு பாதகமில்லை யென்பதும்.

2. (1) 1924-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி யன்றைக்கும் அது முதற்கொண்டும் இதனுடன் சேர்த்திருக்கும் முதலாவது ஷெட்யூலில் கண்டுள்ள சட்டங்கள் அதில் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு ரத்தாய்விடும்.

(2) இதனால் ரத்துசெய்யப்பட்ட யாதொரு சட்டப்படியாவது சார்ட்டர் என்னும் சாஸனத்தின்படியாவது செய்யப்பட்ட சகல விதிகளும் நேமகங்களும் நிர்ணயிக்கப்பட்ட தண்டனைகளும் நிஷ்கரிஷை செய்யப்பட்ட கட்டணங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர்களும் ரோலில் தாக்கல் செய்துகொள்ளப்பட்ட பெயர்களும் பிறப்பிக்கப்பட்ட ஸெர்டிபிகேட்டுகளும் கொடுக்கப்பட்ட அனுமதிகளும் ஜாரிபணணப்பட்ட உத்தரவுகளும் - இந்த ஆக்டின்படி முறையே செய்யப்பட்டவைகளாகவும் நிர்ணயிக்கப்பட்டவைகளாகவும் நிஷ்கரிஷை செய்யப்பட்டவைகளாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டவைகளாகவும் தாக்கல் செய்துகொள்ளப்பட்டவைகளாகவும் பிறப்பிக்கப்பட்டவைகளாகவும் கொடுக்கப்பட்டவைகளாகவும் ஜாரிபண்ணப்பட்டவைகளாகவும் எண்ணப்படும்.

(3) இதனால் ரத்துசெய்யப்பட்ட யாதொரு சட்டத்தையாவது சார்ட்டரையாவது ஜாரி செய்யப்பட்ட எந்த ஆக்டிலாகிலும் சார்ட்டரிலாகிலும் ரெகுலேஷனிலாகிலும் பிரசுரம் பண்ணப்பட்ட எந்த விளம்பரத்திலாகிலும் உதகரித்திருந்தால், அப்படிப்பட்ட சகல உதகரணங்களையும் இந்த ஆக்டிலுள்ள அதற்குப் பொருத்தமான நிபந்தனைகளை உதகரித்திருந்தாற்போலவே வாசிக்கவேண்டும்.

அர்த்தம் கூறும் பகுதி.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(i) 'ஹைகோர்ட்' என்பது - சார்டடர் பெற்ற யாதொரு ஹைகோர்ட் என்று அர்த்தமாவது மல்லாமல், இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஹைகோர்ட்டாகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் பிரசித்தம் செய்யப்பட்ட வேறே யாதொரு ஹைகோர்ட் அல்லது பிரதான கோர்ட் என்பதும் அதில் அடங்கும்;

(ii) 'ஜட்ஜ்' என்பது - என்ன உத்தியோகப் பெயர் கொடுக்கப்பட்டபோதிலுஞ் சரி, ஒவ்வொரு ஸிவில் கோர்ட்டிலும் க்ரிமினல் கோர்ட்டிலும அக்கிராசனம் வகிக்கிற நீதி விவகார விசாரணை உத்தியோகஸ்தரென்று அர்த்தமாகும்;

(iii) 'ஸபார்டினேட் (கீழ்) கோர்ட்' என்பது - 1850-ம் வருஷத்து 9-வது ஆக்டின்படியாவது 1865-ம் வருஷத்து 11-வது ஆக்டின்படியாவது 1887-ம் வருஷத்து 9 வது ஆக்டின்படியாவது ஸ்தாபிக்கப்பட்ட ஸ்மால்காஸ் கோர்ட்டுகள் உட்பட ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் சகல கோர்ட்டுகளும் என்று அர்த்தமாகும்;

(iv) 'ரெவினியு ஆபிஸ்' என்பதில், நிலத்துக்குடையவர்களுக்கும் அவர்களுடைய பாயக்காரிகள் அல்லது ஏஜெண்டுகளுக்கும் சம்பந்தப்பட்டதாய் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு ஆக்டின்படி வியாஜ்ஜியங்களைப் பரிசீலனை செய்கிற (ஸிவில் கோர்ட்டுகளல்லாத வேறே) சகல கோர்ட்டுகளும் என்பதும் அடங்கும்;

(v) 'அட்வொகேட் ஜெனரல்' என்பதில், ஹைகோர்ட்டிலே நியாயவாதம் செய்யும் ஸீனியர் (உயர்தர) கவர்ன்மெனட் அட்வொகேட் அல்லது ப்ளீடர் என்பதும் அடங்கும்;

(vi) 'நியாயவாதி' என்பது - இந்த ஆக்டிற் கண்ட நிபந்தனைகளின்படி நியாயவாதியாய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அல்லது ரோலில் தாக்கல் செய்யப்பட்ட அட்வொகேட் என்றாவது வக்கீல் என்றாவது அர்த்தமாகும்;

(vii) 'ப்ளீடர்' என்பது - யாதொரு ஹைகோர்ட்டைச் சேர்ந்த அட்வொகேட் அல்லது வக்கீல் அல்லது அட்டர்ணி என்று அர்த்தமாவதுமல்லாமல், அதில் 1923-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் முப்பத்தோராந் தேதியன்று 1879-ம் வருஷத்து நியாயவாதிகளாக்டின்படி நியாயவாதம் செய்துகொண்டிருக்கும் அல்லது நியாயவாதம் செய்ய பாத்தியதை பெற்றிருக்கும் ப்ளீடர்கள், முக்தியார்கள் என்பதும் அடங்கும்; ஆனால், இந்த ஆக்டிற் கண்ட நிபந்தனைகளின்படி அட்வொகேட்டாகவாகிலும் வக்கீலாகவாகிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் யாதொரு நபா என்பது அதில் அடங்காது.

1879-ம் வருஷத்து 17-வது ஆக்ட்.

## 2-ம் அத்தியாயம்.

### ஜெனரல் பார் கௌன்ஸில்களும் டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸில்களும்.

ஜெனரல் பார் கௌனஸிலை அமைப்பது.

4. (1) யாதொரு ஹைகோர்ட் ஏற்பட்டிருக்கிற மாகாணங்களில் பிரதேச கவர்ன்மெண்டார்கள் - இந்த ஆக்ட் ஜாரியானவுடனே, தங்கள் தங்களுடைய மாகாணங்களைச் சேர்ந்த ஹைகோர்ட்டின் ஹெட்க்வார்ட்டரில் (தலைமை ஸ்தானத்தில்) ஜெனரல் பார் கௌன்ஸில் என்னும் நியாயவாதிகளின் பொதுச் சபை யொன்றை ஏற்படுத்தவேண்டும்; அதில் சீவ் ஜஸ்டிஸ் அல்லது சீவ் ஜட்ஜ் உட்பட ஹைகோர்ட்டைச்சேர்ந்த மூன்று ஜட்ஜி

களும் அட்வொகேட் ஜெனரலும் ஹைகோர்ட்டைச் சேர்ந்த அட்வொகேட்டுகளாகவாவது வக்கீல்களாகவாவது அட்டர்ணிகளாகவாவதிருந்து ஹைகோர்ட்டுகளில் நியாயவாதம் செய்பவர்களாயுள்ள உத்தியோகஸ்தர்களல்லாத பதினறு மெம்பர்களும் இருக்கவேண்டும்.

(2) ஹைகோர்ட் ஸ்தாபிக்கப்பட்டிராத மாகாணங்களில், இந்தியா கவர்ன்மென்டார் - அந்த மாகாணத்திலுங்கூட விசாரணை அதிகாரம் செலுத்தவும் அதன் ஜெனரல் பார் கௌன்ஸிலாயிருக்கவும் அடுத்தாற்போலுள்ள யாதொரு மாகாணத்தின் ஜெனரல் பார் கௌன்ஸிலுக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

(3) ஜெனரல் பார் கௌன்ஸிலுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் நாலு வருஷகாலம் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(4) ஜெனரல் பார் கௌன்ஸிலின் உத்தியோகத்தில் ஏற்படும் சகல காலி ஸ்தானங்களையும், முதல் கெளின்ஸிலாரால் இது விஷயமாய் ஏற்படுத்தப்படும் விதிகளின் பிரகாரம் அந்த மாகாணத்தின் ஹைகோர்ட்டைச் சேர்ந்த அட்வொகேட்டுகள் எலெக்ஷன் மூலமாய்ப் பூர்த்தி செய்யவேண்டும்.

(5) ஹைகோர்ட்டின் சீவ் ஜஸ்டிஸ் அல்லது சீவ் ஜட்ஜும் அட்வொகேட் ஜெனரலும் உத்தியோக முறைமையில் ஜெனரல் பார் கௌன்ஸிலின் மெம்பர்களாவார்கள்.

(6) பிரதேச கவர்ன்மென்டார் - ஹைகோர்ட்டைச் சேர்ந்த இரண்டு ஜட்ஜிகளை ஜெனரல் பார் கெளின்ஸிலின் மெம்பர்களாயிருக்கும்படி நியமிக்கவேண்டும்; அந்தப்படி நியமிக்கப்பட்ட ஜட்ஜிகள் நாலு வருஷகாலம் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸிலை ஏற்படுத்துவது.

5. ஜெனரல் பார் கௌன்ஸிலார் - யாதொரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜின் ஹெட் க்வார்ட்டரில் டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸில் என்னும் நியாயவாதிகளின் ஜில்லா சபைகளை ஏற்படுத்தவேண்டும்; அவைகளில், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜும் ஜில்லாவின் ஸீனியர் ஸபார்டினேட் ஜட்ஜும் கவர்ன்மெண்ட் ப்ளீடரும் பிரஸ்தாப ஜில்லாவில் நியாயவாதம் செய்யும் நியாயவாதிகள் அல்லது ப்ளீடர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் வேறே ஏழு நியாயவாதிகள் அல்லது ப்ளீடர்களும் இருக்கவேண்டும். நியாயவாதிகளின் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் ஜெனரல் பார் கௌன்ஸிலாரின் உத்தரவுகளின்படி நடந்துகொள்வதும் அந்தத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் ஜெனரல் பார் கௌன்ஸிலுக்குத் தெரிவிப்பதும் டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸிலின் கடமையாகும்.

இப்போதிருக்கும் உரிமைகளுக்கு பாதகமில்லையென்பது.

6. இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 1923-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் முப்பத்தோராந்தேதியன்று யாதொரு ஹைகோர்ட்டின் ரோலில் வக்கீல், அட்வொகேட் அல்லது அட்டர்ணியாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - பிரவர்த்திப்பது விஷயமாயும் நியாயவாதம் செய்வது விஷயமாயும் இப்பொழுது செலாவணியாய்க் கொண்டிருக்கும் அல்லது 1923-ம்௵ டிஸெம்பர்௴ 31-ம௳ செலாவணியாகப்போகும் சட்டங்களின்படியும் விதிகளின்படியும் ரெகுலேஷன்களின்படியும் எம்மாதிரியாகவும் எந்த திட்டங்களின்படியும் எந்த உரிமைகளுடனும் சுதந்தரங்களுடனும் நியாயவாதம் செய்யக்கூடுமோ அம்மாதிரியாகவும் அதே திட்டங்களின்படியும் அதே உரிமைகளுடனும் சுதந்தரங்களுடனும் யாதொரு கோர்ட்டிலாவது ரெவினியு ஆபிஸிலாவது நியாயவாதம் செய்துகொண்டுவர அர்ஹராவார்கள்.

ரோலில் தாக்கல்செய்துகொள்ளும் அதிகாரி.

7. 1924-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்றைக்கும் அது முதற்கொண்டும், ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளில் நியாயவாதம் செய்யும் பொருட்டு நபர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கும் ரோலில் தாக்கல் செய்துகொள்ளுவதற்குமான அதிகாரமானது - பிரஸ்தாப மாகாணத்தின் ஜெனரல் பார் கௌன்ஸிலினிடத்தில் சங்கிரமித்திருக்கும். பார் கௌன்ஸிலார் - தாங்கள் அப்போதைக்கப்போது ஜாரிசெய்யக்கூடிய ரெகுலேஷன்களுக்கும் விதிகளுக்கும் உட்பட்டு, இந்திய நியாயவாதிகளாய்ச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு யோக்கியதை பெற்றிருக்கும் நபர்களை ஹைகோர்ட்டின் அட்வொகேட்டுகளாக அந்தப்படி சேர்த்துக்கொள்ளலாம்; மேலும், அவர்கள் - ரோலில் தாக்கல் செய்துகொள்ளப்படுவதற்கு யோக்கியதை பெற்றிருக்கும் நபர்களை வக்கீல்களாக ரோலில் தாக்கல் செய்துகொள்ளவேண்டுமென்று பிரதேச சட்டநிரூபண சபையார் அந்த சபையில் செய்த யாதொரு தீர்மான மூலமாக விரும்பும் மாகாணங்களில் அவர்களையுங்கூட வக்கீல்களாக ரோலில் தாக்கல் செய்துகொள்ளலாம்.

அட்வொகேட்டுகளைச் சேர்த்துக்கொள்வது.

8. யாதொரு மாகாணத்தின் ஜெனரல் பார் கௌன்ஸிலால் இந்திய நியாயவாதிகளாய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட அட்வொகேட்டுகள் - ஜெனரல் பார் கௌன்ஸிலால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்கும் ரெகுலேஷன்களுக்கும் உட்பட்டிருந்துங்கூட, அந்த மாகாணத்தி

லுள்ள ஹைகோர்ட்டிலும் அதற்குக் கீழ்ப்பட்டுள்ள சகல கோர்ட்டுகளிலும் அந்தக் கோர்ட்டின் பிரதேச விசாரணை அதிகார வரம்பில் இருக்கும் சகல ரெவினியு ஆபிஸுகளிலும் நியாயவாதம் செய்யவும் பிரவர்த்திக்கவும் அல்லது வாதம் செய்யவும் அர்ஹராவார்கள். மேலும், அவர்கள் - அந்த மாகாணத்தைச் சேர்ந்த ஜெனரல் பார் கௌன்ஸிலார் பொதுவாகவோ அல்லது பிரத்தியேகமாகவோ கொடுக்கும் அனுமதியைப் பெற்றும் பொதுவான அல்லது விசேஷமான விதிமூலமாய் அந்தக் கௌன்ஸிலார் நிர்ணயிக்கக் கூடிய விதிகளுக்கும் ரெகுலேஷன்களுக்கும் உட்பட்டும் ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள வேறே யாதொரு கோர்ட்டிலாகிலும் ரெவினியு ஆபிஸிலாகிலும் நியாயவாதம் செய்ய அர்ஹராவார்கள்.

*வக்கீல்களைச் சேர்த்துக் கொள்வது.*

9. இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு மாகாணத்தின் ஜெனரல் பார் கௌன்ஸிலாரால் ரோலில் தாக்கல் செய்துகொள்ளப்பட்ட வக்கீல்கள் - அந்த மாகாணத்தின் ஹைகோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட சகல கோர்ட்டுகளிலும் அந்த மாகாணத்தைச் சேர்ந்த ஹைகோர்ட்டின் அப்பீல் விசாரணை அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் இருக்கும் சகல ரெவினியு ஆபிஸுகளிலும் நியாயவாதம் செய்யவும் பிரவர்த்திக்கவும் அல்லது வாதம் செய்யவும் அர்ஹராவார்கள்.

*இந்திய நியாயவாதிகளின் கூட்டத்தில் வக்கீல்களையும் அட்டர்ணிகளையும் அட்வொகேட்டுகளையும்சேர்த்துக்கொள்வது.*

10. சார்ட்டர் பெற்ற யாதொரு ஹைகோர்ட்டின் வக்கீல், அட்டர்ணி அல்லது அட்வொகேட்டாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - ஜெனரல் பார் கௌன்ஸிலால் நிர்ணயிககப்படும் கட்டணங்களைச் செலுத்துவதன்மேல், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி அட்வொகேட்டாக இந்திய நியாயவாதிகளின் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அர்ஹராவார். டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸிலார் சிபாரிசு செய்வதன்மேல், சகல ப்ளீடர்களும் முக்தியார்களும் - நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டணங்களைச் செலுத்துவதற்குட்பட்டு ஜெனரல் பார் கௌன்ஸிலால் வக்கீலாக ரோலில் தாக்கல் செய்துகொள்ளப்படலாம்.

*பாரிஸ்டர்கள், ஸொலிஸிடர்கள் முதலியவர்களை இந்திய நியாயவாதிகளின் கூட்டத்தில் சேர்த்துக்கொள்வது.*

11. இங்கிலாந்தின் பாரிஸ்டர்கள் அல்லது ஸ்காத்லாந்திலுள்ள (Faculty) பாகல்டி ஆவ் அட்வொகேட்ஸ் என்னும் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களும் இங்கிலாந்திலுள்ள மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் ஹைகோர்ட்டுகளைச் சேர்ந்த அட்டர்ணிகள் அல்லது ஸொலிஸிடர்களும்கூட - ஜெனரல் பார் கௌன்ஸிலால் நிர்ணயிக்கப்படக் கூடிய திட்டங்களுக்கும் அப்படிப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்கும் உட்பட்டு அட்வொகேட்டுகளாக இந்திய நியாயவாதிகளின் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அர்ஹராவார்கள்.

*நியாயவாதி அல்லது ப்ளீடரைத் தவிர வேறே எவரும் நியாயவாதம் செய்யக்கூடாதென்பது.*

12. இந்த ஆக்டின் தாற்பரியப்படி நியாயவாதியாகவாவது ப்ளீடராகவாவது இராத எந்த நபரும் ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு கோர்ட்டிலாகிலும் ரெவினியு ஆபிஸிலாகிலும் நியாயவாதம் செய்யக்கூடாது. யாதொரு கட்சிக்காரராயினும் பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டாயினும் தம்முடைய சொந்த கேஸை நடத்துவதற்குள்ள பாத்தியதைக்கு இந்தப்பிரிவில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது.

## 3-ம் அத்தியாயம்.

### ஜெனரல் பார் கௌன்ஸிலின் அதிகாரங்கள்.

*ஜெனரல் பார் கௌன்ஸில் பிரதிநிதிச் சபையாயிருக்கவேண்டுமென்பது.*

13. ஜெனரல் பார்கௌன்ஸிலானது - பிரஸ்தாப மாகாணத்தைச் சேர்ந்த நியாயவாதிகளின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிச் சபையாகும்; அந்தத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் பிரவர்த்தித்து அதுவிஷயமாய் யுக்தமாயிருப்பதாகக் கருதப்படக்கூடிய நடவடிக்கை நடத்துவது அதன் கடமையாகும். பற்பல பார் கௌன்ஸில்கள் தங்களுடைய பொது நன்மைக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படக்கூடிய விதிகளின்படி ஒன்றுய்ச் சேர்ந்து பிரவர்த்திக்கவேண்டும்.

*விதிகளை செய்ய ஜெனரல் பார் கௌன்ஸிலுக்குள்ள அதிகாரம்.*

14. யாதொரு மாகாணத்தின் ஜெனரல் பார் கௌன்ஸிலார்-இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட 1915-ம் ௵த்து ஆக்ட் 26-வது பிரிவில் அடங்கியுள்ள கோட்பாட்டுக்கும் பொருத்தமாக அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம்:—

(a) இந்த ஆக்டின் காரியங்களுக்காகவும் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் அல்லது ரோலில் தாக்கல் செய்து கொள்ளப்படுபவர்களின் சங்கியை விஷயமாய் எவ்வித வரையறையுமில்லாமலும், அட்வொகேட்டுகளாகவாவது வக்கீல்களாகவாவது இருப்பதற்குத் தகுதியான நபர்களின் யோக்கியாதாம்சங்களும், அவர்களைச் சேர்த்துக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும், ரோலில் தாக்கல் செய்துகொள்வதும், அவர்களுக்கு ஸெர்டிபிகேட் கொடுப்பதும்;

(b) அப்படிப்பட்ட நபர்களைப் பரீக்ஷை செய்வதற்கும் சேர்த்துக்கொள்வதற்கும் ரோலில் தாக்கல் செய்துகொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் செலுத்தவேண்டிய கட்டணங்கள்;

(c) நியாயவாதிகளைத் தள்ளிவிடுவதும் சிறிது காலத்துக்கு நீக்கிவைப்பதும் தொழில் விஷயத்தில் (அவர்களுடைய) துர்நடத்தையைக் குறித்து விசாரணை செய்வது சம்பந்தமான நடவடிக்கை முறையும், பொதுவாய்த் தொழில், நடத்தை, மரியாதை முதலிய ஒழுக்கமுறை சம்பந்தமாய் விசாரணையதிகாரம் செலுத்துவதைக்குறித்த சகல விஷயங்களையும்பற்றி ஆலோசிப்பதும்;

(d) கட்சிக்காரர்கள் அட்வொகேட்டுகளையும் வக்கீல்களையும் நியமித்துக்கொள்வதும் அவர்களுக்குச் செலுத்தத்தக்க கட்டணங்களும்;

(e) டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸிலின் அலுவல்களை வரையறுப்பதும், அவைகளின் நடவடிக்கை முறையைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதும், பொதுவாய் இந்த ஆக்டில் கண்ட காரியங்களை நிறைவேற்றுவதும்.

*பார் கௌன்ஸில்கள் சட்டப்படி சேர்ந்த சபைகளாகுமென்பது.*

15. ஜெனரல் பார் கௌன்ஸிலும் டிஸ்ட்ரிக்ட் பார் கௌன்ஸிலும் முறையே சட்டப்படி சேர்ந்த சபைகளாகும்.

*பரீக்ஷகர்களின் சபையை நியமிப்பது.*

16. இந்திய நியாயவாதிகளாய்ச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான அல்லது வக்கீல்களாய்ரோலில் தாக்கல் செய்துகொள்ளப்படுவதற்கான நபர்களின் யோக்கியதாம்சங்களை சுலபமாய் நிச்சயித்தறியும்பொருட்டு, பார் கௌன்ஸிலார் - பரீக்ஷகர்களின் சபை ஒன்று ஏற்படும்படியாக அப்போதைக்கப்போது நபர்களை நியமிக்கவேண்டும்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட பரீக்ஷைகளை நடத்துவதற்காக அப்போதைக்கப்போது ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்.

*கம்மிட்டிகள்.*

17. ஜெனரல் பார் கௌன்ஸிலார் - ஒழுக்கமுறை சம்பந்தமான காரியங்களுக்காக 3 பேருக்குக் குறையாமலும் 7 பேருக்கு மேற்படாமலுமுள்ள கம்மிட்டி ஒன்றையும் தங்களைச் சேர்ந்த மெம்பர்களிலிருந்தே ஏற்படுத்தலாம்.

*உத்தியோகஸ்தர்களை நியமிப்பது.*

18. பிரதேச கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்துக்குட்பட்டு, ஜெனரல் பார் கௌன்ஸிலார் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தியோகஸ்தர்களையும் குமஸ்தாக்களையும் ஊழியக்காரர்களையும் நியமிப்பதுமல்லாமல், அவரவர்களுடைய கடமைகளையும் நிர்ணயிக்கலாம்.

*நியாயவாதிகளின்மேல் ஹைகோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.*

19. சகல நியாயவாதிகளின்மேலும் ப்ளீடர்களின்மேலும் ஒழுக்கமுறை சம்பந்தமாய் ஹைகோர்ட்டார் விசாரணை அதிகாரம் செலுத்துவதற்குள்ள அதிகாரத்துக்கு இதில் கண்டதெதுவும் பாதகம் உண்டாகமாட்டாது; மேலும், மேற்படி விசாரணை அதிகாரத்தை, ஹைகோர்ட்டாரால் செய்யப்படும் விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்குட்பட்டு செலுத்தலாம்.

*ஜெனரல் பார் கௌன்ஸிலின் தீர்மானங்களின்மேல் அப்பீல்கள்செய்துகொள்வது.*

20. யாதொரு நியாயவாதியை அந்தத்தொழிலிலிருந்து நீக்கிவிடும்படியாவது அவரைச் சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கும்படியாவது ஜெனரல் பார் கௌன்ஸிலார் செய்யும் தீர்மானங்களின்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்.

*தண்டனைகள்.*

21. நியாயவாதியாகவாவது ப்ளீடராகவாவதிராமல் யாதொரு கோர்ட்டிலாகிலும் ரெவினியு ஆபிஸிலாகிலும் அந்தப்படி நியாயவாதம் செய்கிற யாதொரு நபர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

---

## ஷெட்யூல்.

(2-வது பிரிவைப் பார்க்கவும்.)

**ரத்து செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.**

| வருஷம். | நம்பர். | சுருக்கமான பெயர். | இவ்வளவுமட்டில் ரத்து. |
|---|---|---|---|
| | | **ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்ட ஆக்டுகள்.** | |
| 1879 | 18 | 1879-ம் வருஷத்து நியாயவாதிகளாக்ட் .. .. | முழுவதும். |
| 1908 | 5 | 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டம். | 3-வது அதிகாரத்தைச் சேர்ந்த 4-வது விதி. |
| | | **பம்பாய் ஆக்ட்.** | |
| 1920 | 17 | 1920-ம் வருஷத்து பம்பாய் ப்ளீடர்களாக்ட் .. | முழுவதும். |
| | | **சார்ட்டர் பெற்ற ஹைகோர்ட்டுகளின் லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகாரபத்திரம்.** | |
| | | வங்காளத்தில் போர்ட் உல்லியத்திலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசர் என்னும் நீதி விவகார விசாரணை நடத்தும் ஹைகோர்ட்டின் லெட்டர்ஸ் பேடென்ட். | 9-வது பகுதி. |
| | | சென்னபட்டணத்திலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 9-வது பகுதி. |
| | | பம்பாயிலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 9-வது பகுதி. |
| | | அலஹாபாதிலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 7-வது பகுதி. |
| | | பாட்னுவிலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 7-வது பகுதி. |
| | | லாகூரிலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 7-வது பகுதி. |
| | | ரங்கூனிலுள்ள ஹைகோர்ட் ஆவ் ஜுடிகேசரின் லெட்டர்ஸ் பேடென்ட். | 7-வது பகுதி. |

---

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

க்ரேட் ப்ரிடனிலும் யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய நாடுகளிலும் இருக்கிற நியாயவாதிகளின் கூட்டங்கள் வேலைசெய்யும்மாதிரியாகவே இந்தியாவிலும் ப்ரத்தியேகமாகவும் ஒன்றுபட்டும் சுயேச்சையுடன் வேலை செய்யக்கூடிய இந்திய நியாயவாதிகளின் கூட்டம் ஒன்று ஏற்படும்படியாக இந்த தேசத்திலுள்ள நியாயவாதிகளின் தொழிலைப் புனர்நிர்மாணம் செய்யவேண்டுமென்று இந்தியாவில் பற்பல பிரிவுகளையும் சேர்ந்த நியாயவாதிகள் நெடுநாளாய் விருப்பம் கொண்டிருக்கிறார்கள். இந்த நோக்கத்துடன் முன்ஷி ஈஸ்வர் சரண் என்பவர் 1921-ம் வருஷம் பெப்ரவரி மீ 24உ இந்திய சட்ட நிரூபண சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். பற்பல பிரிவுகளைச் சேர்ந்த நியாயவாதிகளுக்குள் ஸ்டாட்யூட் என்னும் சாஸனத்தை அனுசரித்தாவது மாமூலை அனுசரித்தாவது பாராட்டப்பட்டு வரும் சகல பேதங்களையும் ஒழிப்பதற்காக சட்ட நிரூபணம் செய்யவேண்டுமென்று அவர் கவர்ன்மெண்டாரை ஷை தீர்மான மூலமாய்க் கேட்டுக்கொண்டார். அதன்மேல் கவர்ன்மெண்டார் தரப்பில் பேசிய கனம்பொருந்திய லா மெம்பர் இது விஷயத்தில் பொது ஜனங்களின் திட்டமான அபிப்பிராயப்படி நடந்துகொள்ளத் தாம் தயாராயிருப்பதாகத் தெரிவித்ததுமல்லாமல், அப்பிரகாரமே இவ்விஷயத்தைக் குறித்து இந்தியாவிலுள்ள பிரதேச கவர்ன்மெண்டுகளுக்கும் ஹைகோர்ட்டுகளுக்கும் பிரதேச அதிகார சபைகளுக்கும் எழுதி அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதாக ஒப்புக்கொண்டார். இந்தப்படி பொருள்படும் தீர்மானம் ஒன்றும் சட்ட நிரூபண சபையில் அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிறகு போதுமான காலம் ஆய்விட்டபடியால், இது விஷயத்திலே நியாயவாதிகளின் பொதுவான அபிப்பிராயத்தை ஒருமிக்கச் சேர்ப்பது அவசியமாகும். இந்திய நியாயவாதிகளின் கூட்டம் ஒன்று ஏற்படுத்துவதும் யாதொரு மாகாணத்தின் சந்தர்ப்பங்களை உத்தேசிக்கும்போது அவசியமாயிருந்தால் மாத்திரமே வெளி ஜில்லாக்களுக்காக அதைப் போன்ற மற்றொரு கூட்டம் ஏற்படுத்துவதும் இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். ரோலில் தாக்கல் செய்வது, ஒழுக்கமுறை, நியாயவாதிகளின் தொழில் சம்பந்தமான நடத்தையைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவது முதலிய ஷை தொழிலுக்குரிய விஷயங்கள் சம்பந்தமாக அதிகாரம் பெற்றதாய் ப்ரத்தியேகமாயுள்ள பிரதிநிதிச் சபை ஒன்றை நியாயவாதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதும் இதன் நோக்கமாகும்.

1922-ம் வருஷம் ஜூலை மீ 22உ.

டி. ரங்காசாரியார்.

---

எல். க்ரேஹாம்,
இந்தியா கவர்ன்மென்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.